# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 59/மா/2023**
**நாள் : 03.04.2023**

திரு. C. அம்பேத்கர்
சின்ன திருப்பதி, சேலம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
சேலம் மாநகராட்சி – எதிர்மனுதாரர்

சேலம் மாநகராட்சி, சின்ன திருப்பதி போஸ்ட், கம்பர் தெரு, விஜய் இல்லம், எண்.254, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. C. அம்பேத்கர் என்பவரின் 28.02.2023 நாளிட்ட மனு 02.03.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 59/மா/2023 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சேலம் மாநகராட்சி, சின்ன திருப்பதி போஸ்ட், கம்பர் தெரு, விஜய் இல்லம், எண்.254 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. C. அம்பேத்கர் தனது முறையீட்டு மனுவில்,

"சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை மண்டலம்-44வது டிவிசன் புதிய சுண்ணாம்பு சூளை தெருவில் 40 ஆண்டுகளாக வசிக்கும் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு சாலை வசதி, சாக்கடை வசதி, குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி, மின் இணைப்பு வசதி இல்லாமல் பெரும் சிரமத்துடன் வாழ்ந்து வருகின்றனர். மேற்கண்ட பகுதி மக்களின் சார்பில் சேலம் மாநகராட்சி நிர்வாகத்திடம் கோரிக்கை மனு 2015-ம் ஆண்டு முதல் கொடுக்கப்பட்டது. ஆனால் இன்னும் மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லை. 2021-ம் ஆண்டு சேலம் மாநகராட்சி ஆணையாளர் அவர்களிடம் நேரில் கோரிக்கை மனு அளித்தோம். அவர் அம்மாபேட்டை வார்டு அலுவலகம் உதவி ஆணையாளருக்கும் உதவி செயற் பொறியாளர் அவர்களிடமும் அனைத்து அடிப்படை வசதிகள் செய்திட உத்தரவு அளித்தார். அதன் பின் சுகாதார வளாகம் கட்டித் தரப்பட்டது. மேலும் ஆண்டுகள் ஆகியும் சாலை வசதி, தெரு விளக்கு வசதி, குடிநீர் வசதிகள் எதுவும் செய்து தரப்படவில்லை என சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை வார்டு அலுவலகம் முன்பு 17.02.2023 அன்று காலை 10.10 மணி அளவில் பொது

மக்களை வைத்து தர்ணா போராட்டம் நடத்தினோம். அதனடிப்படையில் சேலம் மாநகராட்சி உயர்திரு. ஆணையாளர் அவர்கள் என்னிடம் பேச்சு வார்த்தை நடத்தி அம்மாபேட்டை மண்டலம் 44-வது டிவிசன் உதவி செயற்பொறியாளர் திருமதி. சுமதி அவர்களை நேரில் அழைத்து மேற்கண்ட பகுதியில் உடனடியாக பத்து தெருவிளக்கு கம்பம் 10 நாட்களுக்குள் அமைத்திட வேண்டும். மேலும் மேற்கண்ட பகுதியில் அனைத்து அடிப்படை வசதிகள் துரிதமாக முடிக்கவேண்டுமென உத்தரவு அளித்தார்.

மேலும் மாநகராட்சி உயர்திரு. ஆணையாளர் அவர்கள் உத்தரவு அளித்தும் உதவி செயற் பொறியாளர் சுமதி அவர்கள் ஏற்படுத்தி தரவில்லை. சாலை வசதி, சாக்கடை வசதி, குடிநீர் வசதி எதுவும் செய்துதரவில்லை. மக்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். மேதகு முறைமன்ற நடுவர் அவர்கள் சேலம் மாநகராட்சி உயர்திரு ஆணையாளர் அவர்கள் உத்திரவு அளித்தும் மேற்கண்ட பகுதிகளில் எந்தவித அடிப்படை வசதிகள் செய்து தராமல் மெத்தன போக்கை கையாளும் சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை மண்டலம் 44-வது டிவிசன் உதவி செயற்பொறியாளர் (AE) திருமதி. சுமதி அவர்கள் மீது துறை சார்ந்த நடவடிக்கை எடுத்து அவர்கள் பணி நீக்கம் செய்திட வேண்டுமாறும் மேற்கண்ட பகுதியில் அனைத்து அடிப்படை வசதிகள் செய்து தருமாறும் மக்களின் சார்பில் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை உதவி ஆணையாளரிடம் கோரப்பட்டது இந்நிலையில் இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 21.03.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 15.3.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**மனுதாரர் 21.03.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.**

"சேலம் மாநகராட்சி, அம்மாபேட்டை, மண்டலம் - 44வது டிவிஷன், புதிய சுண்ணாம்பு சூளை தெருவில் 40 ஆண்டுகளாக வசிக்கும் சுமார் 52 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு சாலை வசதி, சாக்கடை வசதி, குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி, மின் வசதி போன்ற அடிப்படை வசதிகள் இல்லாமல் பெரும் சிரமத்துடன் வாழ்ந்து வருகின்றனர். அடிப்படை வசதிகள் வேண்டி 2015-ஆம் ஆண்டு முதல் சேலம் மாவட்ட ஆட்சியர் முதல் சேலம் மாநகராட்சி அலுவலர்கள் வரை மனுக்களை அளித்து வருகிறோம்.

மேற்கண்ட மனுக்களின் மீதான நடவடிக்கையாக சேலம் மாநகராட்சி, அம்மாபேட்டை உதவி ஆணையாளர் கடந்த 18.7.2016 அன்று மேற்கண்ட பகுதிக்கான அடிப்படை வசதிகள் வரும் நிதி ஆண்டில் (2016-17) நிதி நிலைமைக்கேற்ப செய்து தரப்படும் என்று அறிவித்தும் இதுவரை மேற்கண்ட அடிப்படை வசதிகள் ஏதும் செய்து தரப்படவில்லை.

எனவே 52 தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் வசிக்கும் மேற்கண்ட இடத்தில் பொதுவான சாலை வசதி, குடிநீர் வசதி மற்றும் தெரு விளக்கு போன்ற அடிப்படை வசதிகளை செய்து தர ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேற்கண்ட 52 குடும்பங்களின் விவரப் பட்டியலின் நகலினை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும், என்னால் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 28.2.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்து கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

**சேலம் மாநகராட்சி, அம்மாபேட்டை மண்டலத்தின் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் 21.03.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளனர் :**

"மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள சேலம் மாநகராட்சி எருமாபாளையம் கிராமம், வார்டு J, பிளாக் 16, TS.எண். 64(P)ல் உள்ள இடம் TSLR ஆவணங்களின்படி குப்பைமேடு என்று வகைபாடு செய்யப்பட்டுள்ளது. நில உரிமை மாற்றம் செய்யப்படவுள்ள 1.72 ஏக்கர் நிலத்திற்கு தென்புறம் உள்ள தாழ்வானப் பகுதியில் (Low Lying Area) அமைந்துள்ள வீடுகள் மாநகராட்சியின் முன் அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ளன. சுமார் 15 குடும்பங்கள் அங்கு வசிக்கின்றன. அவ்வீடுகளுக்கு மாநகராட்சியால் பட்டா மற்றும் வரி ஏதும் விதிக்கப்படவில்லை.

எனவே குப்பைமேடு என வகைப்படுத்தப்பட்டுள்ள இடத்தில் மனுதாரர் கோரிய அடிப்படை வசதிகள் செய்து தர சாத்திய கூறு ஏதும் இல்லை எனவும் மாநகராட்சி விதிக்கு உட்பட்டு சாத்தியக் கூறு இருப்பின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும், நில உரிமை மாற்றம் செய்ய நடைமுறையில் உள்ள நிலத்தின் Lay-out மற்றும் கடித ந.க.எண்.நி.அ.2 (3)/9441/2008, நாள்:24.2.2021 நகல் மற்றும் சர்வே ஆவண நகல்களை ஆகியவைற்றை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கிறோம்.

மேலும், சேலம் மாநகராட்சி அம்மா பேட்டை மண்டலம் உதவி ஆணையரின் 18.3.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல்வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்'' எனத் தெரிவித்துள்ளனர்.

**சேலம் மாநகராட்சி உதவி ஆணையர் தனது 20.3.2023 நாளிட்ட கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார் :**

சேலம் மாநகராட்சி அம்மாப்பேட்டை வார்டு அலுவலகத்திற்கு உட்பட்ட கோட்டம் எண்.44ல் மனுதாரர் புகார் தெரிவித்துள்ள நிலம் சேலம் முனிசிபல் கவுன்சில் குப்பைமேடு என நகர நில அளவை ஆவணப் பதிவேட்டில் பதிவாக உள்ளது. மேற்கண்ட இடத்தில் எருமாபாளையம் கிராமம், வார்டு J. பிளாக் எண்.16, நகரளவை

எண்.64(pt)ல் விஸ்தீர்ணம் 1.72 ஏக்கர் (அ) 0.69.60.6 ஹெக்டேர் நிலத்திற்கு அரசாணை (நிலை) எண்.225, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நில முடிவு அலகு (L.D.7(1) பிரிவு நாள்:04.02.2021ல் நில உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கையில் உள்ளது. மேற்படி நில உரிமை மாற்றம் செய்யப்படவுள்ள நிலத்திற்கு தென்புறம் தற்போது மாநகராட்சிக்கு சொந்தமான குப்பைமேடு நிலத்தில் அனுமதியின்றி வீடுகள் கட்டி குடியிருந்து வருகின்றனர். மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடம் குப்பைமேடு என வகைபாடு உள்ள மாநகராட்சி நிலத்தில் அனுமதியின்றி அமையப்பெற்ற குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் செய்ய இயலாத நிலை உள்ளது என்ற விபரம் மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி நடுவர் மன்றத்திற்கு பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

**முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை மண்டலம் உதவி செயற் பொறியாளர், உதவிப் பொறியாளர் வாக்குமூலம் மற்றும் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறிய முடிகிறது.**

மனுதாரர் திரு. C. அம்பேத்கர், சேலம் மாநகராட்சி, அம்மாபேட்டை மண்டலம்-44வது டிவிசன் சுண்ணாம்பு சூளை தெருவில் விசிக்கும் மக்களுக்கு எந்தவித அடிப்படை வசதிகளையும் சேலம் மாநகராட்சி செய்து தரவில்லையென்றும், எனவே, அடிப்படை வசதிகளை செய்துதர ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டவாறு சேலம் மாநகராட்சி எருமாபாளையம் கிராமம், T.S.No.64 (Part)ல் உள்ள 1.72 ஏக்கர் நிலத்திற்கு தென்புறம் உள்ள இடத்தில் 52 குடும்பங்கள் அடிப்படை வசதிகள் இன்றி வசிப்பது தெரியவருகிறது. ஆனால் அவ்விடம் தாழ்வான பகுதி என்றும், மாநகராட்சிக்கு சொந்தமான குப்பைமேடு என்று வகைபாடு செய்யப்பட்டுள்ளதாலும், அங்கு சேலம் மாநகராட்சி அனுமதியின்றி வீடு கட்டி வசிப்பவர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தருவது சாத்திய கூறு ஏதும் இல்லையென்று, சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை உதவி ஆணையர் தெரிவித்துள்ளார். சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை மண்டல உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடம் குப்பைமேடு என்று வகைபாடு செய்யப்பட்டுள்ளதாலும், அவர்களுக்கு பட்டா மற்றும் வரி ஏதும் விதிக்கப்படாத நிலையிலும், அடிப்படை வசதிகள் செய்து தர சாத்திய கூறுகள் இல்லையென்றும், இருப்பினும் மாநகராட்சி விதிகளுக்குட்பட்டு சாத்திய கூறு இருப்பின் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடம் குப்பைமேடு என்று வகைபாடு செய்யப்பட்ட நிலையில், சேலம் மாநகராட்சி, அம்மாபேட்டை மண்டல அலுவலர்கள் அந்த இடத்தை மக்கள் அனுமதியின்றி வீடு கட்டும் வரை கண்டும் காணாமல் கடந்த பல வருடங்களாக எந்தவித நடவடிக்கை எடுக்காதது வன்மையாக கண்டிக்கத் தக்கது. குப்பைமேடு என்று வகைபாடு என்று செய்யப்பட்ட

இடத்தில், வீடுகள் கட்டி பல வருடங்களாக வசிக்க அனுமதி அளித்துவிட்டு தற்போது குப்பைமேடு என்று காரணம் கூறுவது ஏற்க தக்கது அல்ல. அம்மாபேட்டை புதிய சுண்ணாம்பு சூளைப் பகுதி குப்பைமேடு என்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தற்போது கூறப்படும் நிலையில், சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை வார்டு அலுவலகம், உதவி ஆணையாளர் 18.07.2016 அன்று மேற்கண்ட பகுதியில் குடிநீர் வசதி, சாலை வசதி, போன்ற அடிப்படை வசதிகள் செய்ய மாநகராட்சி நிதி நிலைமையை கருத்தில் கொண்டு 2016-2017ஆம் ஆண்டின் நிதி நிலைமைக்கேற்ப தேர்வு செய்து பணி மேற்கொள்ளப்படும் என்று எந்த அடிப்படையில் தெரிவித்துள்ளார் என்பது வியப்பு அளிப்பதாக இம்முறைமன்றம் கருதுகிறது. தற்போது சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை சுண்ணாம்பு சூளை தெருவில் வசித்து வருபவர்களின் நிலைக்கு சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை மண்டல அலுவலர்கள் தான் பொறுப்பு ஏற்க வேண்டும். எனவே உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்காத சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை மண்டலத்தின் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க சேலம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. இருப்பினும், சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை உதவிப் செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு மாநகராட்சி விதிக்குட்பட்டு தேவையான, அவசியம் என கருத கூடிய அடிப்படை வசதிகளை செய்து தர சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை உதவி ஆணையருக்கு இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

The conduct of Ammapet Zone of Salem Corporation in this particular case does not appear to be above board, honourable and clean for the simple reason that the Zonal Officials have been misleading the petitioner for the last 7 years by repeating the reply of assuring basic works execution way back in 2016-2017 financial year itself depending on the budget provision. What happened to this promise even after 7 years? The Salem Corporation had responded to the CM's cell petition also like this audaciously misleading even Honourable CM's Office by submission of false, unreliable and mischievous reply. Now the Asst. Executive Engineer who appeared for the hearing before the Forum has deposed that the land belongs to the Salem Corporation garbage accumulation site and the second site is located in a low-lying area. This is utterly malicious denying basic amenities like drinking water supply, street lighting, drainage and public toilet provision to the Dalit community families. The Forum directs the DMA to pull up the Salem Corporation officials by appropriate disciplinary action for making false undertaking before CM's petition cell and the petitioner. Charges should be framed against all the officials concerned in the delay, denial of basic facilities and reporting misleading false information to the petitioner, CM's office, and this Forum. The Salem Corporation Commissioner is directed to inspect the area and ensure extension of amenities to the Dalit families living in the land within a period of three months. The Government in MAWS Department is being addressed on this serious issue prevailing in Ammapet division of the Salem Corporation due to the inefficiency, lethargy and continued indifference for 7 years in succession in a crucial issue of provision of essential services. It is a tragic failure of the Local Body system. The Commissioners who served during this period and the

present incumbent deserve severe strictures for their continued wanton lapse, omission and negligence in providing basic services to a habitation of Scheduled Castes living in the area for a substantial period. The Commissioners deserve to be censured critically for this shocking failure.

2023–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 3–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. வாத்தியார் C. அம்பேத்கார்,
மாநில தலைவர்,
அம்பேத்கரைட் பார்ட்டி ஆப் இந்தியா,
254, கம்பர் தெரு, சின்னதிருப்பதி போஸ்ட்,
சேலம் - 636 002.

2) அரசு கூடுதல் தலைமைச் செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை – 600 009.

3) ஆணையாளர்,
சேலம் மாநகராட்சி,
சேலம் - 636 002.

4) உதவி ஆணையர்,
அம்மாபேட்டை, வித்தியா நகர்,
சேலம் மாநகராட்சி, சேலம் - 636 003.

5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

6) இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

03/04/23
செயலாளர்